INDIA TODAY 22 AUG 2007

ஆன்மீகம் படைக்கும் பேதங்களற்ற உலகம்

எண்ணற்ற பிரச்னைகளையும் முரண்பாடுகளையும் தாண்டி இந்தியா இன்று மறு எழுச்சி காண்பதில் நமது ஆன்மீக முறை மௌனமாக, நுட்பமாக பங்காற்றியிருக்கிறது. இந்தியா இப்போது புதிய தொடக்கம் காண்கிறது.

ஜக்கி வாசுதேவ்

இந்தியா பன்முகம் கொண்ட தேசம். இனம், மொழி, கலாச்சாரம், பழக்க வழக்கம், மதம், பாரம்பரியம் ஆகியவற்றின் அடிப்படையில் எண்ணற்ற அடையாளங்கள் இங்கிருப்பது ஆச்சரியத்தையும் பெருமையையும் உண்டாக்கக்கூடியது. எனினும் ஒற்றுமைக்கும் ஒருங்கிணைப்பிற்குமான அச்சுறுத்தல்களும் இதற்குள்ளேதான் இருக்கின்றன. எல்லோரும் ஓர் நிறையாக நிற்பது ஒரு தேசத்தின் உருவாக்கத்திற்கும் அதன் அடையாளத்திற்கும் இறையாண்மைக்கும் தேவையான முக்கியமான அம்சம். ஒரு நாட்டின் மக்களுக்கிடையில் நாமெல்லாம் ஒன்று என்ற அழுத்தமான உணர்வு இல்லாவிட்டால் அந்த நாடு கொடுங்கோல் ஆட்சியையும் குழப்பத்தையும் சந்திக்க நேரிடும்.

நமது சமூகத்தில் நிலவுவது போன்ற ஏற்றத் தாழ்வுகள் வேறு ஒரு நாட்டில் இருந்திருந்தால் அந்நாட்டில் வன்முறையும் பதற்றமும் பெருமளவில் இருந்திருக்கும். இத்தனையையும் தாண்டி இந்தியா காவல் துறைக்கு மிகக் குறைவான வேலை வைக்கும் நாடாக இருக்கிறது. மக்கள் நடந்துகொள்ளும் விதத்தையே பாருங்கள். இந்த மிதமிஞ்சிய சூழ்நிலைகளிலும் அவர்களிடம் அமைதி, கண்ணியம், நல்லெண்ணம் தெரிகிறது.

இத்தனை பிரச்னைகளையும் முரண்பாடுகளையும் தாண்டி மறு எழுச்சி காணும் இந்தியா, வளர்ந்த நாடுகளின் பட்டியலில் இடம் பிடிக்கப் போகிறது. இந்த மண்ணிலும் இந்த மக்களிலும் உள்ளார்ந்து இருக்கும் செழுமையான ஆன்மீக சாரம் அதற்கு மௌனமாக, நுட்பமாக பங்காற்றியதை யாராலும் மறுக்க முடியாது.

எனது இளமைக் காலம் முதல் சைக்கிளிலிலும் பைக்கிலும் நான் இந்தியா நெடுகிலும் பயணம் செய்த போது இந்த சாமானிய மக்களையும் இந்த மண்ணையும் தரிசித்திருக்கிறேன். அங்கெல்லாம் எனக்கு காட்சி தந்த எளிமையும் அழகும் என் மனதைத் தொட்டன. ஆனால் ஏழ்மை என்ற அதீதி என்னை கொதிக்க வைத்தது. மார்க்சிய சிந்தனை நோக்கி தள்ளப்பட்ட அளவுக்கு அது என்னை ஆவேசப்படவைத்தது. ஆனால் அது உணர்ச்சி வேகத்தில் எடுத்த முடிவு என்று எனக்கு விரைவிலேயே புரிந்தது. உணர்ச்சி வேகத்தில் எடுக்கும் முடிவுகள் எந்தத் தீர்வையும் தரா.

எதையும் எளிதில் ஏற்றுக்கொள்ளாத எனக்கு மதம் சார்ந்த எதிலும் நாட்டம் இருக்கவில்லை. அதன் பன்முகங்களை அப்போது நான் உணரவும் இல்லை. ஒரு நாள் மைசூர் அருகே சாமுண்டி மலையில் ஒரு பாறையில் வெறுமனே அமர்ந்திருந்த போது எனக்கு ஓர் ஆழமான அனுபவம் ஏற்பட்டது. நான் அமர்ந்திருந்த அந்தப் பாறையுடன், சுற்றுப்புறத்துடன், அத்தனை உயிர் வாழும் ஜீவராசிகளுடன் நான் ஒன்றிவிட்டது போல உணர்ந்தேன். இருத்தலுடன் ஒன்றிப் போகும் இந்த அனுபவத்தில் கொஞ்சமாவது மக்களுக்கு கிடைக்காத வரை அவர்களால் தங்களோடும் இந்த சமூகத்தோடும் அமைதியாக, ஒற்றுமையாக இருக்க முடியாது என்று அப்போது தோன்றியது.

இந்த அடிப்படை உணர்தல்தான் நமது சமூகத்தின் ஒவ்வொரு வாழ்க்கைமுறைக்கும் அடித்தளம். ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கை மாற்றிவிடப்படும் வாழ்க்கை மதிப்பீடுகளின் அடித்தளமும் இதுதான். ஒரு புத்தர், ஒரு கபீர் மூலம் உச்சத்தைத் தொட்ட கலாச்சாரத்தின் அடிப்படையும் இதுதான்.

பல நூறு ஆண்டு அன்னிய ஆக்கிரமிப்பால் மறைக்கப்பட்டாலும் படையெடுப்பால் சிதைக்கப்பட்டாலும் ஒப்பீட்டளவில் இந்தியர்களுக்கு அமைதியும் தன்னிறைவும் ஒற்றுமையும் இருக்கிறது. கவனமாக செதுக்கப்பட்ட ஆன்மீக முறையை இந்த மண்ணிலும் மனிதர்களிலும் விதைத்த, ரத்தத்தில் ஊறச் செய்ததன் பலனே இது.

ஆனால் உலக வரலாற்றில் மதத்தின் பெயரால்தான் பல மிகக் கொடூரமான காரியங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. மதங்கள் சில குறிப்பிட்ட நம்பிக்கைகளின் தொகுப்பாக இருப்பதுதான் பிரச்னை. ஒரு மனிதனின் நம்பிக்கை மற்றொரு மனிதனின் நம்பிக்கையுடன் உரசும் போது பிரச்னை உண்டாகிறது. மதங்கள் நம்பிக்கைகளின் அடிப்படையில் இருக்கும் வரை உலகில் மோதல்களை தவிர்க்க முடியாது. ஆனால் ஆன்மீகத் தேடல் கொண்டவர்தான் ஆன்மீக முறையின் மையம். யாறியேன் என்பதை உள்ளுர உணர்ந்தவர்தான் ஆன்மீகத் தேடல் கொண்டவர். அத்தகைய ஒரு மனிதனுக்கு யாருடனும் எதனுடனும் மோதல் இல்லை. அவன் எந்த நம்பிக்கையுடனும் தங்கி விடமாட்டான். தானே கண்டுணரவே அவன் விரும்புவான்.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது ஆன்மீக முறைதான். மக்களை, தேசங்களை ஒன்றிணைக்க சிறந்த வழி அதுவே. ஏனென்றால் ஆன்மீகத்தின் அடிப்படை செயல்பாடே ஒன்றிணைப்புதான். யோகா என்ற வார்த்தைக்கே ஒன்றுபடுத்துதல் என்றுதான் அர்த்தம்.

நமது பாரம்பரியத்தின்படி 60 வயதோடு ஒரு ஆயுள் முடிகிறது. அதற்குப் பிறகு ஒரு புதிய ஆரம்பம் தொடங்குகிறது. 60 ஆண்டு கால போராட்டங்கள் மற்றும் தியாகங்கள், ஊழல்கள் மற்றும் குளறுபடிகள், சாதனைகள் மற்றும் தவறவிடப்பட்ட வாய்ப்புகள், நான்கு போர்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்களைத் தாண்டி ஒரு தேசமாக நாமும் ஒரு புதிய ஆரம்பத்தின் விளிம்பில் நிற்கிறோம்.

நமது நீண்டகால பிரச்னைகளான வறுமை, அடிப்படை வசதியின்மையை தீர்ப்பதற்கான முக்கியமான கால கட்டமாக இனி வரும் 10 ஆண்டுகள் இருக்கும். ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை வாழ்க்கையின் ஒரு மட்டத்திலிருந்து மற்றொரு மட்டத்திற்கு உயர்த்தும் வாய்ப்பு முதல் முறையாக நம் கரங்களில் இருக்கிறது.

நாம் ஒரு தேசமாக ஒற்றுமையுடனும் ஒருமிப்புடனும் செயல்பட்டால் அதை சாதிக்க முடியும். அதைச் செய்யமுடிகிற அதிர்ஷ்டம் இன்றைய தலைமுறைக்கு கிடைத்துள்ளது. வாய்ப்புகளின் புதிய யுகத்திற்குள் இத்தேசம் நுழையட்டும்.



ஒன்றிணைக்கும் சக்தி: இனம், மொழி பேதங்கள் அற்ற தியான மண்டபமான கோவை ஈஷா யோகா மையத்திலுள்ள தியான லிங்கம்

ஜக்கி வாசுதேவ் ஆன்மீகத் தலைவர் மற்றும் ஈஷா அறக்கட்டளையின் நிறுவனர்.